அரசியல்வாதிகள் பொழுதைப் போக்குவதற்காக வேட்டையாடுகிறார்கள். அவர்களை வன இலாகாவினர் தடுக்க முடியவில்லை. ஆகவே, அதைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரி செயல்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யார் யார், எந்தெந்த பெரியவர்கள் எந்தெந்த அரசியல்வாதிகள் தற்போது இதிலே ஈடுபடுகிறார்கள். என்ற விவரத்தைத் தந்தால், குறிப்பாக அவர்களைக் கண்காணித்து, இந்தச் சட்டத்தை அவர்கள் மீது பாயும் அளவிற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

தமிழ்நாட்டில் தனியார்கள் சார்பில் சர்க்கரை ஆலைஅமைக்கும்திட்டம்

55 * வினா எண். —15951 திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார்கள் சார்பில் சர்க்கரைஆலை அமைக்க தமிழக அரசு மத்திய அரசுக்கு 1982–83 ஆம் ஆண்டில் சிபாரிசு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) புதிய சர்க்கரை ஆலை அமைக்க ஒன்பது விண்ணப்பங்கள் அரசுக்குக் கிடைக்கப்பெற்று, அவற்றில் ஏழு விண்ணப்பங்கள் மைய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இதில் மூன்று விண்ணப்பங்களுக்கு மைய அரசு முன் உரிமம் வழங்கியுள்ளது. ஒரு விண்ணப்பம் விண்ணப்பதாரரால் திரும்பப் பெறப்பட்டு விட்டது. மற்றொன்று மாநில அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 9 விண்ணப்பங்களில், 7 விண்ணப்பங்களை அனுப்பியுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 7 விண்ணப்பங்கள் என்றால், அவைகள் எந்தெந்த இடங்களில் என்பதையும் மத்திய அரசு அனுமதித்துள்ள அந்த 3 இடங்கள் எந்தெந்த இடங்களில் என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(1) பொன்னி சுகர்ஸ் மற்றும் கெமிகல்ஸ் லிமிடெட், பள்ளிப்பாளையம், சேலம் மாவட்டம்.

(2) தாராபுரம் சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட், குள்ளப்பாளையம், தாராபுரம் வட்டம், பெரியார் மாவட்டம்.

(3) விஜயலட்சுமி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பெலிச்சி கிராமம், கோவை வட்டம்,
கோவை மாவட்டம்.

(4) பன்னாரியம்மன் சுகர்ஸ் லிமிடெட்,
மலையடிபுதூர் கிராமம், சத்தியமங்கலம் வட்டம்,
பெரியார் மாவட்டம்.

(5) திரு பெரியண்ணன் அவர்கள்
மூத்தனேந்தல் கிராமம், மானாமதுரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

(6) கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்,
கடையநல்லூர் கிராமம், தென்காசி வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

(7) திரு. சி. டி. இராமநாதன் அவர்கள்,
முசிறி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

இதுகாறும் உரிமம் பெற்றிருக்கின்ற மூன்று நிறுவனங்கள்,

(1) பொன்னி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம்,

(2) பன்னாரியம்மன் சுகர்ஸ் லிமிடெட் நிறுவனம்,

(3) திரு பெரியண்ணன்

ஆகிய இந்த நிறுவனங்களுக்கு மத்திய அரசு உரிமம் வழங்கியுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அந்த மூன்று மத்திய அரசால் பரிசீலிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதற்கு மாநில அரசு மத்திய அரசை அனுமதியை வழங்கவேண்டுமென்று வற்புறுத்தியுள்ளதா ? இதைத் தவிர தனியார்கள் சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்க முன்வருகிற போது அரசாங்கம், பரவலாக பின்தங்கிய மாவட்டங்களில், குறிப்பாக போளூர் போன்ற இடங்களில் ஆரம்பிக்க வேண்டும் என்று தொழிலதிபர்களுக்கு தொழில் அமைச்சர் அவர்கள் ஆலோசனை வழங்குவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மைய அரசின் ஆய்விலே நிலுவையிலே உள்ள மனுக்களை விரைவுபடுத்த வேண்டுமென்று மாநில அரசு கூறிவருகிறது, வற்புறுத்திவருகிறது. விரைவிலே அந்த உரிமங்களைப் பெற தக்க நடவடிக்கை எடுக்கிறோம். பின்தங்கிய பகுதிகளில் சர்க்கரை ஆலைகள் வரவேண்டுமென்பதில் அரசுக்கு அக்கரை இருக்கிறது. கரும்பு உற்பத்திக்கு வசதியுள்ள இடங்களில் ஆரம்பிக்க தனியார்கள் முன்வருவார்களானால் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும். அரசு, கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்கவும் அதுபோன்று ஊக்கம் காட்டி வருகிறது.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது கோவை மாவட்டத்தில் பெளிச்சி என்ற கிராமத்தில் சர்க்கரை ஆலை அமைக்கக் கோரி மனு வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே கோவை மாவட்டத்திலே சர்க்கரை ஆலை அமைப்பதற்கு மக்களிடமிருந்து ஷேர் கலெக்ட் செய்யப்பட்டதே, அதனுடைய நிலைமைகள் எப்படியிருக்கின்றன? அந்த ஷேர்கள் இன்னும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. ஏற்கெனவே கலெக்ட் செய்யப்பட்ட அடிப்படையிலே சர்க்கரை ஆலையை ஆரம்பிக்க அரசு ஏதாவது முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்த சர்க்கரை ஆலையைப் பற்றிச் சொல்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. கோவை மாவட்டத்திலே M/s Vijayalakshmi Sugars and Chemicals Ltd., Pelichi village, Coimbatore என்ற நிறுவனத்திடமிருந்து மனு வந்திருக்கிறது. அந்த மனு மைய அரசின் ஆய்வில் இருக்கிறது. ஆனால் அவர்கள் எவ்வளவு ஷேர் வசூல் செய்து இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அரசைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலையை அமைக்க பரிந்துரை செய்திருக்கிறது. திருத்தணியிலே கூட்டுறவுத் துறையிலே அமைப்பதற்கு அனுமதி வந்திருக்கிறது. மயிலாடுதுறையிலே அமைக்க வேண்டுமென்ற பரிந்துரை 3 ஆண்டுகள் ஆகியும் மத்திய அரசு முடிவு எடுக்கவேண்டும். விரைந்து முடிவு எடுக்க வேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. தொடர்ந்து வற்புறுத்தும்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, தனியார் சர்க்கரை ஆலைகள் துவங்க என்ன விதிமுறைகள் வைக்கப்பட்டு இருக்கின்றன? மத்திய அரசில் ஏற்படுகின்ற காலதாமதத்தைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே மைய அரசினுடைய தாமதத்தைப் போக்க மாநில அரசு மைய அரசை வற்புறுத்திவருகிறது. தொடர்ந்து வற்புறுத்தி சுமுகமான முறையிலே அந்த உரிமங்களைப் பெற நடவடிக்கை எடுக்கும். தனியார்களைப் பொறுத்த வரைக்கும் அந்தப் பகுதியிலே ஏற்கெனவே எத்தனை ஆலைகள் இருக்கின்றன, எந்த அளவுக்கு கரும்பு உற்பத்தி இருக்கிறது, உபரி கரும்பு புதிதாக சர்க்கரை ஆலை அமைக்கின்ற அளவுக்கு இருக்குமா என்பதையெல்லாம் கணக்கில்கொண்டு economically such a sugar industry would be viable என்பதையெல்லாம் பார்த்து பரிந்துரை செய்கிறோம். மைய அரசு இதையெல்லாம் ஆய்ந்த பிறகு உரிமம் வழங்குகிறது.

TRUTH ALONE TRIUMPHS